**சுருக்கம்**

வேளாண்மை-உழவர் நலத்துறை - வேளாண்மை நிதிநிலை அறிக்கை 2022-23 - அறிவிப்புகள் - மானிய விலையில் பனை விதைகள் விநியோகம், பனையேறும் இயந்திரங்கள், மதிப்புக்கூட்டு பனைபொருள் தயாரிப்பு உபகரணங்கள் வழங்குதல் மற்றும் பனைபொருள் தயாரிப்புக் கூடம் அமைத்தல், பனை விவசாயிகளுக்கு பயிற்சியளித்தல் மற்றும் சிறந்த பனையேறும் இயந்திரம் கண்டுபிடிப்பாளருக்கு விருதளித்து கௌரவித்தல் - ஆணைகள் - வெளியிடப்படுகின்றன.

---

**வேளாண்மை-உழவர் நலத் [தோ.க1(2)] துறை**

**அரசாணை (நிலை) எண்.205**

**நாள் 01.09.2022**
**திருவள்ளுவர் ஆண்டு 2053**
**சுபகிருது வருடம்,**
**ஆவணித் திங்கள் 16-ஆம் நாள்**

படிக்கப்பட்டது:

1. தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை இயக்குநரின் கடித எண் மாதி 1/2341/2022, நாள் 06.05.2022, 08.06.2022, 13.06.2022 மற்றும் 04.07.2022.

2. தமிழ்நாடு பனை பொருள் வளர்ச்சி வாரியத்தின் செயற்பதிவாளரின் கடித எண். 149/பவா 3/2022, நாள் 19.05.2022 மற்றும் 27.05.2022.

-----

**ஆணை :**

தமிழ்நாட்டின் மாநில மரமும் தமிழர்களின் வாழ்வோடும் மொழியோடும் இயைந்துள்ளதுமான பனை மரம், நிலத்தடி நீரை அதிகரித்தும் மண் அரிப்பினை தடுத்தும், மண்ணை உறுதிப்படுத்தி வளப்படுத்தியும் மண்ணிற்குகந்த மரமாக விளங்குவதோடு, அடி முதல் நுனி வரை பயனளித்து மக்கள் பலரின் வாழ்வதாரமாகவும் விளங்குகிறது.

2. தமிழ்நாட்டில் ஐந்து கோடி பனை மரங்கள் உள்ளன. சுமார் மூன்று இலட்சம் குடும்பங்கள் பனையோலைகள், நார்கள் ஆகியவற்றைக் கொண்டு கூடை பின்னுதல், பாய் முடைதல், கயிறு திரித்தல் போன்ற தொழில்களைச் சார்ந்தும், பதினோராயிரம் பனைத் தொழிலாளர்கள் நுங்கு அறுவடை, பதநீர் இறக்குதல் ஆகிய தொழில்களைச் சார்ந்தும் பனை மரங்களை வாழ்வாதாரமாகக் கொண்டு வாழ்ந்து வருகின்றனர்.

3. எனவே, பனை சாகுபடியை ஊக்குவிப்பதற்காகவும், விவசாயிகளின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்காகவும், கடந்த ஆண்டு (2021-22) வேளாண் நிதிநிலை அறிக்கையில் **"பனை மேம்பாட்டு இயக்கம்"** அறிமுகப்படுத்தப்பட்டது.

4. இத்திட்டத்திற்கு வலுசேர்க்கும் வகையில், மாண்புமிகு வேளாண்மை- உழவர் நலத்துறை அமைச்சர் அவர்கள் 19.03.2022 அன்று சட்டமன்றப் பேரவையில் தாக்கல் செய்த வேளாண்மை நிதிநிலை அறிக்கையில் பிறவற்றுடன் "பனை மேம்பாட்டு இயக்கம்" மூலம் செயல்படுத்தும் பொருட்டு, பின்வரும் அறிவிப்புகளையும் வெளியிட்டுள்ளார்கள்:-

> *"2022-23 ஆம் ஆண்டிலும், இவ்வரசு 10 இலட்சம் பனை விதைகள் விநியோகிக்க நடவடிக்கை எடுக்கும்.*
>
> *பனை விவசாயிகளின் வாழ்வாதாரத்தை ஊக்குவிக்க, பனை மரம் ஏறும் இயந்திரங்கள், பனைவெல்லம், பனங்கற்கண்டு, கருப்பட்டி போன்ற மதிப்புக் கூட்டப்பட்ட பொருட்கள் தயாரிக்கும் கூடம் அமைத்தல், உபகரணங்கள் ஆகியவை 75 சதவீத மானியத்தில் வழங்கப்படும்.*
>
> *பனைவெல்லம் தயாரிக்கும் பயிற்சியும் அதற்கான உபகரணங்களும் 250 பனை விவசாயிகளுக்கு வழங்கப்படும். இது தவிர, 100 பெண்களுக்கு உரிய பயிற்சி அளிக்கப்பட்டு, பனை ஓலைப் பொருட்கள் தயாரிக்க ஊக்குவிக்கப்படுவார்கள். இவர்களுக்கு மூலப்பொருட்களை வழங்கி உற்பத்தி செய்யப்படும் பனையோலைப் பொருட்கள் மாநில, மாவட்ட சங்ககங்களினால் உருப்படிக் கூலி முறையில் வாங்கப்பட்டு தொடர் வேலைவாய்ப்பு வழங்கப்படும்.*
>
> *இத்திட்டம், இரண்டு கோடியே 65 இலட்சம் ரூபாய் நிதியில் செயல்படுத்தப்படும். சிறந்த பனையேறும் இயந்திரத்தைக் கண்டுபிடிப்பவர்களுக்கு விருதும் வழங்கப்படும்.XXX"*

5. மேற்படி அறிவிப்புகளை செயல்படுத்தும் விதமாக, தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை இயக்குநர் மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட தம்முடைய கடிதங்களில், பத்து இலட்சம் பனை விதைகளை 100 சதவீத மானியத்தில் வழங்குதல், சிறந்த பனையேறும் இயந்திரத்தைக் கண்டுபிடிப்பவர்களுக்கு விருது வழங்குதல், 75 சதவீத மானியத்தில் பனை மரம் ஏறும் விவசாயிகளுக்கான உபகரணங்கள், பனைவெல்லம், பனங்கற்கண்டு, கருப்பட்டி போன்ற மதிப்புப் கூட்டப்பட்ட பொருட்கள் தயாரிக்கும் கூடம் அமைத்தல் மற்றும் உபகரணங்கள் வழங்குதல் ஆகிய அறிவிப்புகள் தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறையின் மூலம் செயல்படுத்தப்படும் என்றும், இத்திட்டத்தின் இனங்கள் குறித்த விவரங்களை பின்வருமாறும் தெரிவித்துள்ளார்.:-

(ரூபாய் இலட்சத்தில்)

| வ. எண் | திட்ட இனங்கள் | மானியம் | செயல் திட்டம் 2022-23 | |
|---|---|---|---|---|
| | | | பொருள் இலக்கு | நிதி இலக்கு |
| 1 | பனை விதைகள் விநியோகம் (எண்கள்) | 100% | 10,00,000 | 30.000 |
| 2 | சிறந்த பனையேறும் இயந்திரத்தை கண்டுபிடிப்பவருக்கான விருது | - | - | 1.000 |
| 3 | 160 சதுர அடியில் பனை மதிப்பு கூட்டப்பட்ட பொருட்கள் தயாரிக்கும் கூடம் அமைத்தல் (அலகு) | 75% | 124 | 93.000 |
| 4 | மதிப்பு கூட்டப்பட்ட பொருட்கள் தயாரிக்க உபகரணங்கள் வழங்குதல் (அலகு) | 75% | 510 | 30.600 |
| 5 | பனை ஏறும் விவசாயிக்கு உபகரணங்கள் வழங்குதல் (அலகு) | 75% | 1000 | 45.000 |
| 6 | ஆவணப்படுத்தல் | - | - | 0.400 |
| **மொத்தம்** | | | | **200.000** |

மேலும், தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை இயக்குநர், மேற்குறிப்பிடப்பட்டுள்ள திட்டங்களின் செயலாக்கத்திற்கான வழிமுறைகள், திட்டத்தில் பயனாளிகளுக்கு வழங்கப்படும் உபகரணங்கள் குறித்த விவரம், மதிப்புக் கூட்டப்பட்ட பனை பொருட்கள் தயாரிக்கும் கூடம் கட்டுவதற்கான விரிவான திட்ட அறிக்கை ஆகியவற்றை அனுப்பியுள்ளதுடன் இத்திட்டங்களை ரூ.2.00 கோடி செலவினத்தில் மேற்கொள்வதற்கு அரசின் ஆணை வழங்குமாறு கோரியுள்ளார்.

6. தமிழ்நாடு பனை பொருள் வளர்ச்சி வாரியத்தின் செயற்பதிவாளர் மேலே இரண்டாவதாக படிக்கப்பட்ட தம்முடைய கடிதத்தில், மேலே பத்தி 4-ல் குறிப்பிடப்பட்டுள்ள அறிவிப்புகளில், பனைவெல்லம் மற்றும் பனைங்கற்கண்டு தயாரிக்கும் பயிற்சியும் அதற்கான உபகரணங்களும் 250 பனை விவசாயிகளுக்கு வழங்குதல் மற்றும் 100 பெண்களுக்கு உரிய பயிற்சி அளித்து, பனையோலைப் பொருட்கள் தயாரிக்க ஊக்குவித்தல் ஆகிய அறிவிப்புகள் பனை மேம்பாட்டு இயக்கத்தில், தமிழ்நாடு பனை பொருள் வளர்ச்சி வாரியத்தால் செயல்படுத்தப்படும் என்று தெரிவித்துள்ளதுடன் இத்திட்டங்களுக்கான திட்ட அறிக்கையில் உள்ள இனங்கள் குறித்த விவரங்களை பின்வருமாறும் தெரிவித்துள்ளார்:-

(ரூபாய் இலட்சத்தில்)

| வரிசை எண். | விபரம் | தொகை |
|---|---|---|
| 1. | அ.250 பனை விவசாயிகளுக்கு தரமான பனை வெல்லம் மற்றும் பனங்கற்கண்டு தயாரிப்பு பயிற்சி திட்டம். | 9.95 |
| | ஆ.பனை வெல்லம் மற்றும் பனங்கற்கண்டு தயாரிப்பு பயிற்சி பெற்ற 250 பனை விவசாயிகளுக்கு உபகரணங்கள் வழங்கும் திட்டம். | 44.71 |
| 2. | 100 பெண்களுக்கு பனை ஓலைப் பொருட்கள் தயாரிப்பு பயிற்சி அளிக்கும் திட்டம். | 11.01 |
| | **மொத்தம்** | **65.67** |

மேற்காணும் பயிற்சிகள் மற்றும் பனை விவசாயிகளுக்கு வழங்கப்படும் உபகரணங்கள் குறித்த விவர அறிக்கையினை அரசுக்கு அனுப்பியுள்ளதுடன் இத்திட்டங்களை ரூ.65.67 இலட்சம் செலவினத்தில் மேற்கொள்வதற்கு ஆணை வழங்குமாறு அரசைக் கோரியுள்ளார்.

7. தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை இயக்குநர் மற்றும் தமிழ்நாடு பனை பொருள் வளர்ச்சி வாரியத்தின் செயற்பதிவாளர் ஆகியோரின் மேற்கண்ட செயற்குறிப்புகளை ஆய்வு செய்த அரசு, அவற்றில் குறிப்பிடப்பட்டுள்ள மானிய விகிதங்களில் சிலமாறுதல்களுடன் அச்செயற்குறிப்புகளை ஏற்று பின்வரும் விவரப்படியான இத்திட்டத்தின் கூறுகளை செயல்படுத்திட ஏதுவாக மொத்த செலவினத் தொகை ரூ.2,02,11,625/-(ரூபாய் இரண்டு கோடியே இரண்டு இலட்சத்து பதினோராயிரத்து அறுநூற்று இருபத்தைந்து மட்டும்) ஒப்புதல் அளித்து அரசு ஆணையிடுகிறது:-

(i) தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை இயக்குநரால் செயல்படுத்தப்படும் திட்டக்கூறுகளின் விவரம்

(ரூபாய் இலட்சத்தில்)

| வ. எண் | திட்ட இனங்கள் | மானியம் | செயல் திட்டம் 2022-23 | |
|---|---|---|---|---|
| | | | பொருள் இலக்கு | நிதி இலக்கு |
| 1 | பனை விதைகள் விநியோகம் (எண்கள்) | 100 % | 10,00,000 | 30.000 |
| 2 | சிறந்த பனையேறும் இயந்திரத்தை கண்டுபிடிப்பவருக்கான விருது | - | - | 1.000 |
| 3 | 160 சதுர அடியில் பனை மதிப்பு கூட்டப்பட்ட பொருட்கள் தயாரிக்கும் கூடம் அமைத்தல் (அலகு) | 50 % | 124 | 62.000 |

[த.பி.பா]

| வ. எண் | திட்ட இனங்கள் | மானியம் | செயல் திட்டம் 2022-23 | |
|---|---|---|---|---|
| | | | பொருள் இலக்கு | நிதி இலக்கு |
| 4 | மதிப்பு கூட்டப்பட்ட பொருட்கள் தயாரிக்க உபகரணங்கள் வழங்குதல் (அலகு) | 50 % | 510 | 20.400 |
| 5 | பனை ஏறும் விவசாயிக்கு உபகரணங்கள் வழங்குதல் (அலகு) | 75 % | 1000 | 45.000 |
| 6 | ஆவணப்படுத்தல் | - | - | 0.400 |
| **மொத்தம்** | | | | **158.800** |

**(ii) தமிழ்நாடு பனைபொருள் வளர்ச்சி வாரிய செயற்பதிவாளரால் செயல்படுத்தப்படும் திட்டக்கூறுகளின் விவரம்**

| வரிசை எண். | விபரம் | தொகை ரூ. |
|---|---|---|
| 1. | அ.250 பனை விவசாயிகளுக்கு தரமான பனை வெல்லம் மற்றும் பனங்கற்கண்டு தயாரிப்பு பயிற்சி திட்டம். | 9,95,000 |
| | ஆ.பனை வெல்லம் மற்றும் பனங்கற்கண்டு தயாரிப்பு பயிற்சி பெற்ற 250 பனை விவசாயிகளுக்கு உபகரணங்கள் வழங்கும் திட்டம் (50% மானியம்) | 22,35,625 |
| 2. | 100 பெண்களுக்கு பனை ஓலைப் பொருட்கள் தயாரிப்பு பயிற்சி அளிக்கும் திட்டம். | 11,01,000 |
| | **மொத்தம்** | **43,31,625** |

**(iii) நிதி ஒப்பளிப்பு விவர சுருக்கம்**

| | | |
|---|---|---|
| i. | தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை இயக்குநருக்கு ஒப்பளிக்கப்படும் தொகை | ரூ.1,58,80,000/- |
| ii. | தமிழ்நாடு பனைபொருள் வளர்ச்சி வாரிய செயற்பதிவாளருக்கு ஒப்பளிக்கப்படும் தொகை | ரூ. 43,31,625/- |
| | **மொத்தம்** | **ரூ.2,02,11,625/-** |

8. மேற்கண்டவற்றிற்கிணங்க தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை இயக்குநருக்கு பின்வரும் ஆணைகளை அரசு பிறப்பிக்கிறது :-

i. பனைவிதை ஒன்றிற்கு ரூ.3/- (ரூபாய் மூன்று மட்டும்) வீதம் ரூ.30.00 இலட்சம் (ரூபாய் முப்பது இலட்சம் மட்டும்) செலவில், பத்து இலட்சம் எண்ணிக்கையிலான பனை விதைகளைக் கொள்முதல் செய்திட ஒப்புதல் வழங்கப்படுகிறது. இவ்வாறு கொள்முதல் செய்த பனை விதைகளை, 100 சதவீத மானியத்தில் விவசாயிகளுக்கு விநியோகம் செய்யவும் ஒப்புதல் வழங்கப்படுகிறது.

ii. பனை சார்ந்த சிறுதொழில் முனைவோர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் விதமாக, சுகாதாரமான மதிப்பு கூட்டப்பட்ட பனை பொருட்கள் தயாரிக்கும் கூடம் அமைப்பதற்காக பனை சார்ந்த சிறு தொழில் முனைவோர்களுக்கு, ரூபாய் ஒரு இலட்சம் மதிப்பீட்டில் 160 சதுர அடியில் நிரந்தர கட்டமைப்பு அமைப்பதற்காக, ஓர் அலகிற்கு 50% பின்னேற்பு மானியம் (அதிகபட்சமாக ரூ.50,000/-) வீதம் 124 அலகுகள் அமைப்பதற்கான மானியத் தொகையாக ரூ.62.00 இலட்சம் (ரூபாய் அறுபத்து இரண்டு இலட்சம் மட்டும்) (124 x ரூ.50,000/-) வழங்குவதற்கு ஒப்புதல் அளிக்கப்படுகிறது. இத்திட்டத்தில் தகுதியுடைய பயனாளிகள், பாரத பிரதமர் உணவு பதப்படுத்தும் குறு நிறுவனங்களுக்கான முறைப்படுத்தும் திட்டம் [Pradhan Mantri Formalization of Micro food processing Enterprises (PMFME)] / வேளாண்மை உட்கட்டமைப்பு நிதி [Agricultural Infrastructure Fund (AIF)] திட்டத்தின் கீழ் உரிய அலுவலரால் தெரிவு செய்யப்படுவர்.

iii. பனை சார்ந்த தொழில்முனைவோர் மற்றும் மேலே இனம் ii-இல் பயன்பெறும் பனை சார்ந்த சிறுதொழில் முனைவோர்கள் மதிப்புக் கூட்டப்பட்ட பொருட்களை தயாரிப்பதற்குத் தேவையான இவ்வாணையின் இணைப்பு -III-இல் குறிப்பிடப்பட்டுள்ள ரூபாய் எட்டாயிரம் மதிப்பிலான உபகரணங்களை அலகு ஒன்றிற்கு 50% பின்னேற்பு மானியத்தில் (அதாவது ரூ4000/-), 510 அலகுகளுக்கு ரூ.20.40 இலட்சம் (ரூபாய் இருபது இலட்சத்து நாற்பதாயிரம் மட்டும்) செலவினத்தில் வழங்குவதற்கு அனுமதி அளிக்கப்படுகிறது. இத்திட்டத்தில் தகுதியுடைய பயனாளிகள் பாரத பிரதமர் உணவு பதப்படுத்தும் குறு நிறுவனங்களுக்கான முறைப்படுத்தும் திட்டம் [Pradhan Mantri Formalization of Micro food processing Enterprises (PMFME)] / வேளாண்மை உட்கட்டமைப்பு நிதி [Agricultural Infrastructure Fund (AIF)] திட்டத்தின் கீழ் உரிய அலுவலரால் தெரிவு செய்யப்படுவர்.

iv. பனையிலிருந்து பதநீர் இறக்கத் தேவையான இவ்வாணையின் இணைப்பு-IV-இல் குறிப்பிடப்பட்டுள்ள ரூ.6000/- (ரூபாய் ஆறாயிரம் மட்டும்) மதிப்பிலான உபகரணங்களை அலகு ஒன்று 75% மானிய வீதம் (அதாவது ரூ.4500/-) 1000 அலகுகளை விவசாயிகளுக்கு ரூ.45.00 இலட்சம் (ரூபாய் நாற்பத்தைந்து இலட்சம் மட்டும்)

(1000 X ரு.4500) செலவினத்தில் வழங்குவதற்கு ஒப்புதல் வழங்கப்படுகிறது.

v. சிறந்த பனையேறும் இயந்திரத்தைத் கண்டுபிடிப்பவர்களை, இவ்வாணையின் இணைப்பு –V இல் குறிப்பிடப்பட்டுள்ள தெரிவுக்குழு மூலம் தெரிவு செய்து, பரிந்துரைக்கப்படுபவர்களுக்கு விருது வழங்கி கௌரவித்திட ரூ.1,00,000/- (ரூபாய் ஒரு இலட்சம் மட்டும்) செலவினத்திற்கு ஒப்புதல் வழங்கப்படுகிறது.

vi. மேலே இனம் (i) முதல் (v) வரையிலான திட்டக்கூறுகளை ஆவணப்படுத்துதல் தொடர்பான பணிகளை மேற்கொள்வதற்கென ரூ.0.40 இலட்சம் (ரூபாய் நாற்பதாயிரம் மட்டும்) செலவினத்திற்கு ஒப்புதல் வழங்கப்படுகிறது.

9. மேலே பத்தி 8–இல் (i) முதல் (v) வரையிலான இனங்களில் ஆணையிடப்பட்டுள்ளவாறான திட்டக்கூறுகளை செயல்படுத்திட ஏதுவாக, இவ்வாணையின் இணைப்பு I முதல் V வரையிலான திட்டக்கூறு வாரியான விரிவான வழிகாட்டு நெறிமுறைகளைத் தவறாது பின்பற்றுமாறு தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை இயக்குநர் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

10. மேலும், தமிழ்நாடு பனை பொருள் வளர்ச்சி வாரியத்தின் செயற்திவாளருக்கு பின்வரும் ஆணைகளை அரசு பிறப்பிக்கிறது :–

i) 250 பனை விவசாயிகளுக்குத் தரமான பனை வெல்லம் மற்றும் பனங்கற்கண்டு தயாரிப்புப் பயிற்சியினை ரூ.9.95 இலட்சம் (ரூபாய் ஒன்பது இலட்சத்து தொண்ணூற்று ஐந்தாயிரம் மட்டும்) செலவினத்தில் வழங்குவதற்கு அனுமதி வழங்கப்படுகிறது.

ii) இவ்வாணையின் இணைப்பு VII–ல் குறிப்பிடப்பட்டுள்ள ரூ.17,885/– மதிப்பிலான பனைவெல்லம் மற்றும் பனங்கற்கண்டு தயாரிப்பதற்கான உபகரணங்களை, மேலே இனம் (i)–ல் குறிப்பிடப்பட்டுள்ள பயிற்சியினை பெற்ற 250 பனை விவசாயிகளுக்கு 50% பின்னேற்பு மானியம் (ரூ.8,942.50) வீதம் ரூ.22,35,625/– (ரூபாய் இருபத்திரண்டு இலட்சத்து முப்பத்தைந்தாயிரத்து அறுநூற்று இருபத்தைந்து மட்டும்) (250 x ரூ.8942.50) செலவினத்தில் அளிப்பதற்கு ஒப்புதல் வழங்கப்படுகிறது. இத்திட்டத்தில் தகுதியுடைய பயனாளிகள் பாரத பிரதமர் உணவு பதப்படுத்தும் குறு நிறுவனங்களுக்கான முறைப்படுத்தும் திட்டம் [Pradhan Mantri Formalization of Micro food processing Enterprises (PMFME)] / வேளாண்மை உட்கட்டமைப்பு நிதி [Agricultural Infrastructure Fund (AIF)] திட்டத்தின் கீழ் உரிய அலுவலரால் தெரிவு செய்யப்படுவர்.

iii) பனையோலைப் பொருட்கள் தயாரிப்பு பயிற்சியை 100 மகளிருக்கு ரூ.11.01 இலட்சம் (ரூபாய் பதினோரு இலட்சத்து ஆயிரம் மட்டும்)

செலவில் வழங்குவதற்கு ஒப்புதல் வழங்கப்படுகிறது. மேற்குறிப்பிடப்பட்டுள்ளவாறு, பயிற்சி பெறுபவர்களுக்கு மூலப் பொருட்கள் வழங்கிடவும், அவர்களால் தயாரிக்கப்படும் பனையோலைப் பொருட்களை மாநில / மாவட்ட சம்மேளனங்களின் மூலம் "உருப்படிக் கூலி" (piece rate basis) முறையில் கூலி வழங்கி தொடர் வேலைவாய்ப்பு வழங்கிடவும் தக்க நடவடிக்கை எடுக்குமாறு தமிழ்நாடு பனை பொருள் வளர்ச்சி வாரியத்தின் செயற்பதிவாளர் அறிவுறுத்தப்படுகிறார்.

11. மேலே பத்தி 10–இல் (i) முதல் (iii) வரையிலான இனங்களில் ஆணையிட்டுள்ளவாறான திட்டக்கூறுகளை செயல்படுத்திட ஏதுவாக இவ்வாணையின் இணைப்பு (vi) முதல் (viii) வரையிலான திட்டக்கூறு வாரியான விரிவான வழிகாட்டு நெறிமுறைகளைத் தவறாது பின்பற்றுமாறு தமிழ்நாடு பனை பொருள் வளர்ச்சி வாரியத்தின் செயற்பதிவாளர் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

12. மேலே பத்தி 7–இல் ஒப்பளிக்கப்பட்டுள்ள மொத்த செலவினத் தொகைகள் பின்வரும் கணக்கு தலைப்புகளின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும் :–

I. 2401–00 பயிர் வளர்ப்பு 108 வணிகப் பயிகள்–மாநிலச் செலவினங்கள் LC பனை மேம்பாட்டு இயக்கம் 305 அலுவலகச் செலவுகள் –02 ஏனைய சில்லறைச் செலவுகள்.

(IFHRMS DPC 2401–00–108 LC 30502) – ரூ.40,000/–

II. 2401–00 பயிர் வளர்ப்பு 108 வணிகப் பயிகள்– மாநிலச் செலவினங்கள் LC பனை மேம்பாட்டு இயக்கம் 311 மானியங்கள் – 01 தனித்திட்ட மானியம்.

(IFHRMS DPC 2401–00–108 LC 31101) – ரூ.1,79,75,625/–

III. 2401–00 பயிர் வளர்ப்பு 108 வணிகப் பயிகள்–மாநிலச் செலவினங்கள் LC பனை மேம்பாட்டு இயக்கம் 359 பரிசுகளும் வெகுமதிகளும்–01 பரிசுகளும் வெகுமதிகளும்.

(IFHRMS DPC 2401–00–108 LC 35901) – ரூ.1,00,000/–

IV. 2401–00 பயிர் வளர்ப்பு 108 வணிகப் பயிகள்–மாநிலச் செலவினங்கள் LC பனை மேம்பாட்டு இயக்கம் 372 பயிற்சி 01 பயிற்சி.

(IFHRMS DPC 2401–00–108 LC 37201)– ரூ.20,96,000/–

13. மேலே பத்தி 7–ல் ஒப்பளிப்பு வழங்கப்பட்டுளள ரூ.2,02,11,625/– செலவினம் ஒரு புதுத் துணைப் பணியாகும். இதற்கான சட்டமன்ற பேரவையின் ஒப்புதல் பின்னர் பெறப்படும். சட்டப் பேரவையின் ஒப்புதலை எதிர்நோக்கி, இச்செலவினம் முதலில் எதிர்பாராச்செலவு நிதியிலிருந்து முன்பணமாக

[த.பி.பா]

ஒப்பளிப்பு செய்யப்படும். இதற்கான ஆணை நிதித் (வ.செ.1) துறையிலிருந்து தனியாக வெளியிடப்படும். அடுத்த துணை மானியக் கோரிக்கை வரை தேவைப்படும் சரியான தொகையினைக் கணக்கிட்டு எதிர்பாராச் செலவு நிதியிலிருந்து முன்பணம் ஒப்புதல் செய்ய தமிழ்நாடு எதிர்பாராச் செலவு நிதி விதிகள், 1963–ன் இணைப்பில் உள்ள படிவம் "அ"வின்படி இவ்வரசாணையுடன் நிதித் (வ.செ.1) துறைக்கு விண்ணப்பிக்குமாறு தோட்டக்கலை மற்றும் மலைப் பயிர்கள் துறை இயக்குநர் கேட்டுக் கொள்ளப்படுகிறார். மேலும், இச்செலவினத்தை 2022–2023–ம் ஆண்டிற்கான துணை மானியக் கோரிக்கையில் சேர்க்கும் பொருட்டு, உரிய செயற்குறிப்பினை உரிய நேரத்தில் இதற்கான குறிப்புடன் நிதித் (வ.செ.பொ.1)/வேளாண்மை–உழவர் நலன்) துறைக்கு அனுப்புமாறு தோட்டக்கலை மற்றும் மலைப் பயிர்கள் துறை இயக்குநர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

14. மேலே குறிப்பிட்டுள்ள புதிய கணக்குத் தலைப்பிற்கு இயக்குநர், தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை அவர்கள் மதிப்பீடு, கணக்கு நேரமைப்பு மற்றும் கட்டுப்பாட்டு அலுவலர் ஆவார்.

15. மேற்சொன்ன திட்டத்தை செயல்படுத்த மேலே பத்தி–7ல் இனம் (ii)–ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் ரூ.43,31,625/– (ரூபாய் நாற்பத்து மூன்று இலட்சத்து முப்பத்தோராயிரத்து அறுநூற்று இருபத்தைந்து மட்டும்) தோட்டக்கலை மற்றும் மலைப் பயிர்கள் துறை இயக்குநர் பெற்று, தமிழ்நாடு பன்னைபொருள் வளர்ச்சி வாரிய செயற்பதிவாளர் அவர்களுக்கு வழங்குமாறு அறிவுறுத்தப்படுகிறார்.

16. இவ்வாணை நிதித் துறையின் அ.சா.எண்.41198/நிதி (வேளாண்மை)/2022, நாள் 27.08.2022–இல் பெறப்பட்ட ஒப்புதலுடன் வெளியிடப்படுகிறது. இதற்கான கூடுதல் நிதியொதுக்கப் பேரேட்டு எண் 1106 (ஆயிரத்து நூற்றி ஆறு). (IFHRMS கூடுதல் நிதியொதுக்கப் பேரேட்டு எண் 2022081106).

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**சி. சமயமூர்த்தி**
**வேளாண்மை உற்பத்தி ஆணையர்**
**மற்றும் அரசு செயலாளர்.**

பெறுநர்
இயக்குநர், தோட்டக்கலை மற்றும் மலைப் பயிர்கள் துறை, சென்னை–5
செயற்பதிவாளர், தமிழ்நாடு பனை பொருள் வளர்ச்சி வாரியம், குறளகம், சென்னை–104.
முதன்மை மாநில கணக்காயர் (G&SSA), சென்னை–18
முதன்மை மாநில கணக்காயர் (E&RSA), சென்னை–18
மாநில கணக்காயர் (தணிக்கை) சென்னை–18
உறைவிட தணிக்கை அலுவலர், முதன்மை மாநில கணக்காயர் அலுவலகம், சென்னை–9.
சம்பள கணக்கு அலுவலர் (கிழக்கு), சென்னை – 600 008.

<u>நகல்</u>

மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம், சென்னை–9.
இயக்குநர், வேளாண்மை துறை, சென்னை–5
மாண்புமிகு நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை–9.
மாண்புமிகு வேளாண்மை–உழவர் நலத் துறை அமைச்சர் அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை – 9.
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர், நிதித்துறை அவர்களின் முதுநிலை தனிச்செயலர், சென்னை–9.
வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும் அரசுச் செயலாளர் அவர்களின் முதுநிலை தனிச் செயலர், சென்னை – 9.
உதவி நிரலர், வேளாண்மை–உழவர் நலத்துறை, சென்னை–9.
கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த்துறை, சென்னை–9.
நிதி (வேளாண்மை/வ.செ.பொ1/வ.செ.பொ2, வ.வ–I)த் துறை, சென்னை– 9.
வேளாண்மை மற்றும் உழவர் நலத் (அநமு3 / வஇபதி) துறை சென்னை–9
சம்பந்தப்பட்ட கோப்பு எண்.11673/தோ.க.1/2022
இருப்புக் கோப்பு/உதிரி.

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

(மா.ராஜேஸ்வரி)
அரசுச் சார்புச் செயலாளர்

[த.பி.பா]

இணைப்பு-I

(அரசாணை (நிலை) எண்.205, வேளாண்மை-உழவர் நலத் [தோ.க.1(2)] துறை, நாள். 01.09.2022)

பனை விதைகள் விநியோகத்திற்கான வழிகாட்டு நெறிமுறைகள்

i. இத்திட்டம், தோட்டக்கலை மற்றும் மலைப் பயிர்கள் துறையால் செயல்படுத்தப்படும்.
ii. நீலகிரி மற்றும் சென்னை மாவட்டங்கள் நீங்கலாக அனைத்து மாவட்டங்களிலும் வழங்கப்பட வேண்டும்.
iii. பனை விதைகள் கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த்துறை மூலம் கொள்முதல் செய்யப்படும்.
iv. ஒவ்வொரு விவசாயிக்கும், அதிகபட்சமாக 50 விதைகள், 100 சதவீத மானியத்தில் இலக்கு ஒதுக்கீட்டின்படி விநியோகிக்கப்பட வேண்டும்.

**சி. சமயமூர்த்தி**
**வேளாண்மை உற்பத்தி ஆணையர்**
**மற்றும் அரசு செயலாளர்.**

**/உண்மை நகல்/**

01/09/2022
பிரிவு அலுவலர்
தோ.க.1
01/09/22

[த.பி.பா]

## இணைப்பு– ii

(அரசாணை (நிலை) எண்.205, வேளாண்மை –உழவர் நலத் [தோ.க.1(2)] துறை), நாள். 01.09.2022)

## மதிப்புக்கூட்டப்பட்ட பனைபொருட்களைத் தயாரிக்கும் கூடம் அமைப்பதற்கான வழிகாட்டு நெறிமுறைகள்

i. இத்திட்டம், தோட்டக்கலை மற்றும் மலைப் பயிர்கள் துறையால் செயல்படுத்தப்படும்.

ii. இத்திட்டம் சென்னை மற்றும் நீலகிரி மாவட்டங்கள் நீங்கலாக, அனைத்து மாவட்டங்களிலும் செயல்படுத்தப்படும்.

iii. பயனாளி, சொந்த நிலத்தில் / குத்தகை நிலத்தில் பனை சாகுபடி செய்பவராக இருக்க வேண்டும் மற்றும் அடங்கல் சமர்ப்பிக்க வேண்டும்.

iv. பயனாளி, தொடக்க பனை வெல்ல கூட்டுறவு சங்கத்தில் (Primary Jaggery Co–operative Society), உறுப்பினராக இருத்தல் வேண்டும்.

v. இத்திட்டத்தில் தயாரிப்புக் கூடம் கட்டுவதற்கான அளவீடுகள் குறித்த விவரம் பின்வருமாறு:–

| வ. எண் | விவரம் | அளவு | அலகு | விலை/ அலகு | தொகை (ரூ.) |
|---|---|---|---|---|---|
| 1 | அடித்தளத்திற்கான நில வேலை | 1.54 | கன மீட்டர் | 204.29 | 314.6 |
| 2 | சிமெண்ட் கான்கிரீட் 1:4:8 (ஒரு பங்கு சிமெண்ட் நான்கு பங்கு எம் மணல் மற்றும் எட்டு பங்கு இயந்திரத்தால் உடைத்து நொறுக்கப்பட்ட கல் ஜெல்லி) 40 மிமீ அளவுள்ள HBG மெஷின் நொறுக்கப்பட்ட கல் ஜெல்லியை நிறுவுதல் மற்றும் அடித்தளத்தை நிறுவுதல் மற்றும் தேவையானால் நீர் வடித்தல் உட்பட | 2.05 | கன மீட்டர் | 4566.915 | 9362.18 |
| 3 | அடித்தளம் மற்றும் தரை வேலை | | | | 17,419.01 |
| 4 | டிரஸ்கள் மற்றும் மேல் கூரை | | | | 71,945.79 |
| 5 | எதிர்பாராச் செலவு | | | | 958.42 |
| | மொத்தம் | | | | 1,00,000 |

**சி. சமயமூர்த்தி**
**வேளாண்மை உற்பத்தி ஆணையர்**
**மற்றும் அரசு செயலாளர்.**

**/உண்மை நகல்/**

01/09/2022
பிரிவு அலுவலர்
01/09/22

[த.பி.பா]

இணைப்பு - III

(அரசாணை (நிலை) எண்.205, வேளாண்மை – உழவர் நலத் [தோ.க.1(2)] துறை, நாள். 01.09.2022)

## மதிப்புக்கூட்டப்பட்ட பனைபொருட்கள் தயாரிப்பதற்கான உபகரணங்கள் வழங்குவதற்கான வழிகாட்டு நெறிமுறைகள்

i. இத்திட்டம், தோட்டக்கலை மற்றும் மலைப் பயிர்கள் துறை மூலம் செயல்படுத்தப்படும்.

ii. சென்னை, நீலகிரி மாவட்டங்கள் நீங்கலாக அனைத்து மாவட்டங்களிலும் செயல்படுத்தப்படும்.

iii. பனைசார்ந்த தொழில் முனைவோர் மற்றும் 160 சதுர அடி பரப்பளவில் மதிப்புக் கூட்டப்பட்ட பனை பொருட்கள் தயாரிக்கும் கூடம் அமைக்கும் திட்டத்தில் பயன்பெறும் பயனாளிகள் இத்திட்டத்தின் கீழ் பயன் பெறலாம்.

iv. பயனாளி தொடக்க பனை வெல்ல கூட்டுறவு சங்கத்தில் (Primary Jaggery Co–operative Society) உறுப்பினராக இருத்தல் வேண்டும்.

v. பயனாளி சொந்த நிலத்தில் பனை சாகுபடி செய்பவராக இருத்தல் வேண்டும் மற்றும் பயனாளியிடமிருந்து அடங்கல் பெறப்பட வேண்டும்.

vi. இத்திட்டத்தில் 50% மானியத்தில் (அதிகபட்சமாக ரூ.4,000/–வரையில்) வழங்கப்படவுள்ள ரூ.8,000/– மதிப்பிலான உபகரணங்களின் விவரம் பின்வருமாறு :–

| வ. எண் | உபகரணம் | மொத்த விலை (ரூ) | மானியம் (ரூ) |
|---|---|---|---|
| 1. | அலுமினிய அண்டா (100 லி கொள்ளளவு) | 5,000 | 2,500 |
| 2. | ஈயப்பானை (35 லி) | 2,000 | 1,000 |
| 3. | கரண்டி (2 எண்கள்) | 1,000 | 500 |
| | மொத்தம் | 8,000 | 4,000 |

**சி. சமயமூர்த்தி**
**வேளாண்மை உற்பத்தி ஆணையர்**
**மற்றும் அரசு செயலாளர்.**

**/உண்மை நகல்/**

01/09/2022
பிரிவு அலுவலர்
சோலை
01/09/22

[த.பி.பா]

## இணைப்பு- IV

(அரசாணை (நிலை) எண்.205, வேளாண்மை –உழவர் நலக் [தோ.க.1(2)] துறை, நாள். 01.09.2022)

## பனை ஏறும் விவசாயிகளுக்கு பனைமரம் ஏறுவதற்கும், அறுவடை செய்வதற்கும் உகந்த உபகரணங்கள் வழங்குதல்

i. இத்திட்டம், தோட்டக்கலை மற்றும் மலைப் பயிர்கள் துறையால் செயல்படுத்தப்படும்.

ii. இத்திட்டம் நீலகிரி தவிர அனைத்து மாவட்டங்களிலும் செயல்படுத்தப்படும்.

iii. இவ்வினத்தின் கீழ் பயன் பெறும் பயனாளி, பனை ஏறுவதற்கான உரிமம் (License) வைத்திருக்க வேண்டும்.

iv. இத்திட்டத்தில் 75% மானியத்தில் (அதிகபட்சமாக ரூ.4,500 வரையில்) வழங்கப்படும் ரூ.6,000/– மதிப்பிலான உபகரணங்களின் விவரம் பின்வருமாறு:–

| வ. எண் | உபகரணம் | மொத்த விலை (ரூ) | மானியம் (ரூ) |
|---|---|---|---|
| 1. | தகரப்பானை (10 லிட்டர் கொள்ளளவு ஒன்று) | 500 | 375 |
| 2. | அரிவாள் (2 எண்கள்) | 2000 | 1500 |
| 3. | முறுக்குத்தட்டி (1 எண்) | 1500 | 1125 |
| 4. | கடிப்பு (2 எண்கள்) | 1000 | 750 |
| 5. | தளவார் (1 எண்), நெஞ்சுவார் (1 எண்), கால்வார் (1 எண்) | 1000 | 750 |
| | **மொத்தம்** | **6,000** | **4,500** |

சி. சமயமூர்த்தி
வேளாண்மை உற்பத்தி ஆணையர்
மற்றும் அரசு செயலாளர்.

/உண்மை நகல்/

01/09/2022
பிரிவு அலுவலர்
சோவ
01/09/22

[த.பி.பா]

இணைப்பு– V

(அரசாணை (நிலை) எண்.205, , வேளாண்மை –உழவர் நலத் [தோ.க.1(2)] துறை, நாள். 01.09.2022 )

சிறந்த பனையேறும் இயந்திரத்தை கண்டுபிடிப்பவருக்கான விருது

i. இத்திட்டம், தோட்டக்கலை மற்றும் மலைப் பயிர்கள் துறை மூலம் செயல்படுத்தப்படும்.

ii. பனை மரத்தில் எவ்வித ஆபத்தும் இன்றி இலகுவாக ஏறுவதற்காகவும், பனை நுங்கு மற்றும் பிற பொருட்களை திறம்பட அறுவடை செய்வதற்காகவும், கருவிகளைக் கண்டுபிடிப்பதற்காக ஆராய்ச்சிகளை மேற்கொள்ளும் பல்கலைக்கழகங்கள், தனியார் நிறுவனங்கள் மற்றும் முற்போக்கு மிக்க விவசாயிகளை ஊக்குவிக்கும் வகையில், சிறந்த பனையேறும் இயந்திரத்தை கண்டுபிடிப்பவருக்கான விருது வழங்கப்படும்.

iii. சிறந்த பனையேறும் இயந்திரம் கண்டுபிடிப்பாளரை கீழ்க்குறிப்பிடப்படுபவர்களால் அமைக்கப்படும் குழு முடிவு செய்யும்:–

- தோட்டக்கலை பேராசிரியர் (தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகம்)
- வேளாண் பொறியியல் பேராசிரியர். (தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகம்)
- தோட்டக்கலை கூடுதல் இயக்குநர் (மத்திய மற்றும் மாநில திட்டம்)
- தமிழ்நாடு பனைபொருள் வளர்ச்சி வாரியத்தால் நியமிக்கப்படும் அலுவலர் ஒருவர் மற்றும்
- பனை சார்ந்த தொழிலில் சிறந்து விளங்கும் முன்னோடி விவசாயி.

iv. பனையேறும் இயந்திரம் கண்டுபிடிப்பதற்காகும் மொத்த செலவு, விலையின் உண்மைத் தன்மை, இயந்திரத்தின் செயல்திறன் மற்றும் ஒட்டுமொத்த பயனளிக்கும் தன்மை ஆகியவற்றின் அடிப்படையில், விருது மேற்கண்ட குழுவால் முடிவு செய்யப்படும்.

v. பனையேறும் இயந்திரத்தை கண்டுபிடிப்பவர்கள், இக்குழுவின் முன்னிலையில் செயல்விளக்கம் அளிக்க வேண்டும்.

சி. சமயமூர்த்தி
வேளாண்மை உற்பத்தி ஆணையர்
மற்றும் அரசு செயலாளர்.

/உண்மை நகல்/

01/09/2022
பிரிவு அலுவலர்
சோமு
01/09/22

[த.பி.பா]

## இணைப்பு – VI

(அரசாணை (நிலை) எண்.205, வேளாண்மை –உழவர் நலத் [தோ.க.1(2)] துறை, நாள். 01.09.2022)

## தரமான பனைவெல்லம் மற்றும் பனங்கற்கண்டு தயாரிப்புப் பயிற்சியை பனை விவசாயிகளுக்கு வழங்கும் திட்டத்திற்கான வழிகாட்டு நெறிமுறைகள்

i. இத்திட்டம், தமிழ்நாடு பனை பொருள் வளர்ச்சி வாரியத்தின் மூலம் செயல்படுத்தப்படும்.

ii. இத்திட்டத்தில் 250 பனை விவசாயிகளுக்கு பயிற்சி வழங்கப்படும்.

iii. 250 விவசாயிகளை 50 பேர்கள் கொண்ட குழுக்களாகப் பிரித்து, ஒவ்வொரு குழுவிற்கும் 10 நாட்கள் பயிற்சி அளிக்கப்படும்.

iv. மேற்குறிப்பிடப்பட்டுள்ளவாறு பயிற்சி பெற்றவர்களைத் திறமையின் அடிப்படையில் தேர்வு செய்து, அவர்களுக்கு, மாநில / மாவட்ட சம்மேளனங்களின் கிளைகள் மூலம் பதநீர் வழங்கிடவும் அவர்களால் உற்பத்தி செய்யப்படும் தரமான பனை வெல்லம் மற்றும் பனங்கற்கண்டு ஆகியவற்றிற்கேற்ப அவர்களுக்கு வேலைக்கேற்ற ஊதியம் (piece rate work) வழங்கி வேலைவாய்ப்பு வழங்கப்படும்.

v. இப்பயிற்சிகளின் செலவின விவரம் பின்வருமாறு:–

| வ. எண் | விவரம் | தொகை (ரூ.) |
|---|---|---|
| 1 | பயிற்சியாளர்களுக்கான உதவித் தொகை:<br>நபர் ஒருவருக்கு நாள் ஒன்றுக்கு ரூ.250/– வீதம் 10 நாட்களுக்கு 50 பெண்களுக்கு (ரூ.250 X 50 X 10 நாட்கள்) | 1,25,000/– |
| 2 | பயிற்றுநர் கட்டணம் :<br>ஒரு மையத்திற்கு நாள் ஒன்றுக்கு ரூ.600/– வீதம் 10 நாட்களுக்கு (ரூ.600 X 10 நாட்கள்) | 6,000/– |
| 3 | மூலப்பொருட்களுக்கான செலவினம் :<br>பதநீர் ஒரு மையத்திற்கு நாள் ஒன்றுக்கு 35 லிட்டர் என 10 தினங்களுக்கு 350 லிட்டர் தேவை.<br>(ரூ.60 X 35 லி x 10 நாட்கள்) | 21,000/– |
| 4 | சிறப்பு ஆசிரியர் மற்றும் உதவியாளருக்கான கட்டணம் :<br>Chief lecturer with Assistant Fees for last Day of Training | 7,000/– |
| 5 | எழுது பொருட்கள் :<br>வருகைப் பதிவேடு, பயிற்சி பெற்றதற்கான சான்றிதழ் அச்சடித்தல், செய்முறை விளக்கப் புத்தகம் மற்றும் இதர பொருட்கள். | 10,000/– |

| | | |
|---|---|---|
| 6 | பயிற்சி மையத்திற்கான கட்டிட வாடகை | 10,000/- |
| 7 | சிற்றுண்டி செலவினம் :<br>குடிநீர், பிஸ்கட், காபி<br>ஒரு நபருக்கு நாளொன்றுக்கு ரூ.40/- வீதம் 50 நபர்களுக்கு 10 நாட்களுக்கான செலவினம்<br>(ரூ.40 X 50 x 10 நாட்கள்) | 20,000/- |
| | மொத்தம் | 1,99,000/- |

| | | |
|---|---|---|
| **அ)** | **ஒரு குழுவிற்கான பயிற்சி செலவினத் தொகை** | **ரூ.1,99,000/-** |
| **ஆ)** | **5 குழுக்களுக்கான பயிற்சி செலவினத் தொகை (ரூ.1,99,000/- X 5)** | **ரூ.9,95,000/-** |

**சி. சமயமூர்த்தி**
**வேளாண்மை உற்பத்தி ஆணையர்**
**மற்றும் அரசு செயலாளர்.**

**/உண்மை நகல்/**

01/09/2022
பிரிவு அலுவலர்
ஜோவ
01/09/22

[த.பி.பா]

இணைப்பு– VII

(அரசாணை (நிலை) எண்.205, வேளாண்மை –உழவர் நலத் [தோ.க.1(2)] துறை, நாள். 01.09.2022)

பனைவெல்லம் மற்றும் பனங்கற்கண்டு தயாரிப்புப் பயிற்சி பெறும் விவசாயிகளுக்கு உபகரணங்கள் வழங்கும் திட்டத்திற்கான வழிகாட்டு நெறிமுறைகள்

(i) இத்திட்டம், தமிழ்நாடு பனை பொருள் வளர்ச்சி வாரியத்தின் மூலம் செயல்படுத்தப்படும்.

(ii) இத்திட்டத்தில் 50% பின்னேற்பு மானியத்தில் வழங்கப்படும் உபகரணங்களின் விவரம் பின்வருமாறு :–

| வ. எண் | விவரம் | எண்ணிக்கை | தொகை (ரூ.) |
|---|---|---|---|
| 1 | பதநீர் ஊற்றி வைக்கும் பாத்திரம் – 50 லிட்டர் கொள்ளளவு | 1 | 2,100/– |
| 2 | பதநீர் காய்ச்சும் கொப்பரை – 150 லி கொள்ளளவு | 1 | 12,750/– |
| 3 | துடுப்பு | 1 | 210/– |
| 4 | ஸ்டீல் கண் கரண்டி | 1 | 425/– |
| 5 | 16 குழிகள் கொண்ட அச்சு மரப்பலகை | 1 | 2,100/– |
| 6 | ஸ்டீல் குழிக்கரண்டி | 1 | 300/– |
| | மொத்தம் | | 17,885/– |

| | | |
|---|---|---|
| அ) | ஒரு விவசாயிக்கான செலவினம் (50% மானியம்) | ரூ. 8,942.50 |
| ஆ) | 250 பனை விவசாயிகளுக்கான செலவினம் (250 X ரூ.8,942.50) | ரூ.22,35,625/– |

சி. சமயமூர்த்தி
வேளாண்மை உற்பத்தி ஆணையர்
மற்றும் அரசு செயலாளர்.

/உண்மை நகல்/

01/09/2022
பிரிவு அலுவலர்
01/09/22

[த.பி.பா]

## இணைப்பு– VIII

(அரசாணை (நிலை) எண்.205, வேளாண்மை –உழவர் நலத் [தோ.க.1(2)] துறை, நாள். 01.09.2022)

**பனையோலைப் பயிற்சி வழங்குவதற்கான திட்டத்தின் வழிகாட்டு நெறிமுறைகள்**

i. இத்திட்டம், தமிழ்நாடு பனை பொருள் வளர்ச்சி வாரியத்தின் மூலம் செயல்படுத்தப்படும்.

ii. இத்திட்டத்தில் 100 மகளிருக்கு ரூ.11.01 இலட்சம் செலவில் பயிற்சியளிக்கப்படும்.

iii. இத்திட்டத்தில் பயன்பெறும் 100 பெண்கள், 25 பெண்கள் கொண்ட குழுக்களாகப் பிரிக்கப்பட்டு, ஒவ்வொரு குழுவிற்கும் 25 நாட்கள் பயிற்சி அளிக்கப்படும்.

iv. இப்பயிற்சிக்காகும் இனவாரியான செலவின விவரம் பின்வருமாறு:–

| வ. எண் | விவரம் ( ஒரு குழுவிற்கு) | தொகை (ரூ.) |
|---|---|---|
| 1 | <u>பயிற்சியாளர்களுக்கான உதவித் தொகை:</u><br>நபர் ஒருவருக்கு நாள் ஒன்றுக்கு ரூ.250/– வீதம் 25 நாட்களுக்கு<br>(ரூ.250 X 25 X 25 நாட்கள்) | 1,56,250/– |
| 2 | <u>பயிற்றுநர் கட்டணம் :</u><br>ஒரு மையத்திற்கு நாள் ஒன்றுக்கு ரூ.480/– வீதம் 25 நாட்களுக்கு<br>(ரூ.480 X 25 நாட்கள்) | 12,000/– |
| 3 | <u>மூலப்பொருட்களுக்கான செலவினம் :</u><br>பனை ஓலை, சாயம், எரிபொருள் மற்றும் இதரவை, நபர் ஒருவருக்கு நாள் ஒன்றுக்கு ரூ.100/– வீதம் 25 நாட்களுக்கு<br>(ரூ100 X 25 x 25 நாட்கள்) | 62,500/– |
| 4 | <u>சிறப்பு ஆசிரியர் மற்றும் உதவியாளருக்கான கட்டணம் :</u><br>Chief lecturer with Assistant Fees for last Day of Training | 7,000/– |
| 5 | <u>எழுது பொருட்கள் :</u><br>வருகைப் பதிவேடு, பயிற்சி பெற்றதற்கான சான்றிதழ் அச்சடித்தல், செய்முறை விளக்கப் புத்தகம் மற்றும் இதர பொருட்கள். | 2,500/– |

| | | |
|---|---|---|
| 6 | பயிற்சி மையத்திற்கான கட்டிட வாடகை | 10,000/- |
| 7 | <u>சிற்றுண்டி செலவினம் :</u><br>குடிநீர், பிஸ்கட், காபி<br>ஒரு நபருக்கு நாளொன்றுக்கு ரூ.40/- வீதம் 25 நபர்களுக்கான செலவினம்<br>(ரூ.40 X 25 x 25 நாட்கள்) | 25,000/- |
| | மொத்தம் | 2,75,250/- |

| | | |
|---|---|---|
| அ) | 25 பெண்கள் கொண்ட ஒரு குழுவிற்க்கான பயிற்சி செலவினம் | ரூ.2,75,250/- |
| ஆ) | 4 குழுக்களுக்கான பயிற்சி செலவினம் | ரூ.11,01,000/- |

சி. சமயமூர்த்தி
வேளாண்மை உற்பத்தி ஆணையர்
மற்றும் அரசு செயலாளர்.

/உண்மை நகல்/

01/09/2022
பிரிவு அலுவலர்
01/09/22